| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| சா. சேதுராமவர்மா, | அனைத்து முதன்மைக் கல்வி |
| அரசுத் தேர்வுகள் இயக்குநர், | அலுவலர்கள் மற்றும் இணை |
| சென்னை – 600 006. | இயக்குநர் (கல்வி),புதுச்சேரி. |

**ந.க.எண். 019807 /எப்1/2022** **நாள். 17 .02.2023**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 - மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச் / ஏப்ரல் 2023 – +1 Arrear மாணவர்கள் - 2021-2022 ஆம் கல்வியாண்டில் மேல்நிலை முதலாமாண்டு தொழிற்கல்வி பாடப் பிரிவில் பயின்று பொதுத் தேர்வில் தோல்வியுற்ற / வருகை புரியாத பாடங்களில் பழைய பாடத்திட்டத்தின்படி தேர்வு எழுதுதல்- மாணவர்களுக்கு விவரம் தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை :**
1. அரசாணை (நிலை) எண்.125, பள்ளிக்கல்வி (ப.க.7(1))த் துறை, நாள்:15.07.2022.
2. அரசு கடித (நிலை) எண்.215 / அ,தே/2022, நாள்.07.12.2022.

*******

பார்வை 1-இல் காணும் அரசாணையில் மேல்நிலைக் கல்வியில் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடநூல்கள் சீரமைக்கப்பட்டதன் அடிப்படையில், 2022-2023-ம் கல்வியாண்டு முதல் மேல்நிலை முதலாம் ஆண்டு தொழிற்கல்வி பாடப்பிரிவுகளில் இணைப்பில் கண்டுள்ள 8 தொழிற்கல்வி பாடப்பிரிவின் பாடநூல்கள் தமிழ் மற்றும் ஆங்கில வழிகளில் மறுசீரமைக்கப்பட்டும், தொழிற்கல்வி பாடப்பிரிவில் இடம் பெற்றுள்ள கணினித் தொழில் நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாடுகள் என்ற பாடங்களுக்கு மாற்றாக வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills) என்ற புதிய பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**பார்வை 2-ல் காணும் அரசு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க** தற்போது பள்ளியில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயின்று வரும் மாணவர்கள் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வின் போது இணைப்பில் கண்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள 8 தொழிற்கல்வி பாடப்பிரிவில் பயின்று பொதுத் தேர்வில் தோல்வியுற்ற / வருகை புரியாத தேர்வுகளை **மார்ச் 2023 பருவத்தில் பழைய பாடதிட்டத்தின்படி தேர்வு எழுதுதல் வேண்டும்.**

2022 – 2023 ஆம் கல்வியாண்டில் மேல்நிலை முதலாம் ஆண்டு தொழிற்கல்வி பாடப்பிரிவில் பயிலும் மாணவர்கள் பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி **புதிய பாடத்திட்டத்தில் தேர்வு எழுதுதல் வேண்டும்.**

மேற்குறிப்பிட்ட இவ்விவரத்தினை அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளியில் தொழிற்கல்விப் பாடப் பிரிவில் பயிலும் First Year Arrear மாணவர்களுக்கு தெரிவித்திடும் பொருட்டு உரிய அறிவுரை வழங்கிடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-

**இயக்குநர்**

**இணைப்பு:** பார்வையில் காணும் அரசாணை, அரசுக் கடிதம் மற்றும் பட்டியல்

**நகல்:**

1.அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

2.அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள் - தகவலுக்காக